# மாகாணக் கல்வித் திணைக்களம்

## வடமாகாணம்

பயிற்சிப் பரீட்சை - 2017

**பரதநாட்டியம் - பகுதி 1**

தரம் - 13 (2017) நேரம் : 2 மணித்தியாலம்

**01 – 50 வரையான வினாக்களுக்குச் சரியான விடையினைத் தெரிவுசெய்க.**

01. கணபதி கௌத்துவத்தின் ஸாகித்திய கர்த்தா யார்?
1. பாபநாசம் சிவன் 2. சிவானந்தம் 3. கங்கை முத்துநட்டுவனார்
4. வீரமணி ஐயர் 5. அருணாசலக் கவிராயர்

02. மதுர பக்தியை வெளிப்படுத்தும் நடன உருப்படி
1. அஷ்டபதி 2. பதம் 3. கீர்த்தனை 4. வர்ணம் 5. ஜாவளி

03. வீணையில் சுருதிக்காகத் தனியே தந்திகள் பொருத்தப்படாத வாத்தியம் எவ்வாறு அழைக்கப்படும்?
1. பஹுத்வனி வாத்தியம் 2. நிஸ்களவாத்தியம் 3. சகல வாத்தியம்
4. வைணிகர் வாத்தியம் 5. மங்கள வாத்தியம்

04. நையாண்டி மேளம் ஒலி அமைப்புக் குறியீட்டில் காணப்படும் காட்சி அமைப்பு
1. போர்த்தொடக்கம் 2. கோயில் சூழல் 3. மரணக் காட்சி
4. கிராமிய நடனம் 5. பாம்பு வருதல்

05. அந்நியப் பெண்களைத் தன் சாமர்த்தியத்தினால் வசப்படுத்தி அனுபவிப்பவன்
1. பதி 2. சடன் 3. அனுகூலன் 4. வைசிகன் 5. உபபதி

06. ஜனாதிபதி வேட்பாளராக நிற்கும் வாய்ப்புப் பெற்ற நடனப்பெண்மணி
1. ருக்மணிதேவி 2. பத்மா சுப்பிரமணியம் 3. கௌரி அம்பாள்
4. பாலசரஸ்வதி 5. சரோஜாதேவி

07. ரஸத்தோடு நேரடியான தொடர்புடைய பாவம்
1. அனுபாவம் 2. உத்தீபன விபாவம் 3. ஆலம்பன விபாவம்
4. ஸ்தாயி பாவம் 5. விபாவம்

08. இராமநாத நுண்கலைத்துறையில் 1998ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புதிய கற்கை நெறி
1. சமஸ்கிருதம் 2. சித்திரமும் வடிவமைப்பும் 3. கதகளி நடனம்
4. நாடகமும் அரங்கியலும் 5. கர்நாடக சங்கீதம்

09. “ஹஸ்த லக்சண தீபிகா” எனும் நூலிலுள்ள விடயங்கள் எந்த சாஸ்திரிய நடனத்துடன் தொடர்புபட்டது?
1. பரதநாட்டியம் 2. கதக் 3. ஒடிசி 4. மணிப்புரி 5. கதகளி

10. கோவில் வழிபாட்டில் சோடசோபசாரம் என்ற பதினாறு அங்கங்களில் பதினைந்தாவது அங்கம்
1. பக்தி 2. கீத வாத்தியம் 3. வணக்கமுறை
4. நிருத்தியோபசாரம் 5. கோயில் பணி

11. ;; , தகதிகு ததிங்கிணதொம் தக / திகு ததிங்கிணதொம் த / கதிகு ததிங்கிணதொம் // இது எந்த ஜாதியில் அடங்கும்?
1. மிஸ்ரம் 2. சங்கீர்ணம் 3. கண்டம் 4. சதுஸ்ரம் 5. திஸ்ரம்

12. நாயன்மார்களின் ஆழ்வார்களின் பாடல் மூலம் நாட்டியக்கலை உன்னதமாக இருந்தது என அறிய உதவும் வரலாற்றுக்காலம்
   1. நாயக்கர் காலம்   2. சோழர் காலம்   3. குப்தர் காலம்
   4. சேரர் காலம்   5. பல்லவர் காலம்

13. முருகனின் ஆறுமுகத் தத்துவக் கருத்துக்களை வெளிப்படுத்தும் திருப்புகழ்
   1. இறவாமல் பிறவாமல்   2. நாடித் தேடித் தொழுவார்   3. ஏறுமயில் ஏறி விளையாடு
   4. பக்தியால் யானுனை   5. முத்தித்தரு பக்தித் திருநகை

14. இலங்கையில் மலையக மக்களால் ஆடப்படும் காமன் கூத்தில் வாசிக்கப்படும் வாத்தியம்
   1. தப்பட்டை   2. சங்கு   3. சேமக்கலம்   4. மிருதங்கம்   5. முகவீணை

15. பிசாசுகளுக்குச் சாந்திக் கருமம் ஆற்றும்போது ஆடப்படும் சபரகமுக நடன சம்பிரதாயம்
   1. சிந்து மாத்ரய   2. யாதினி மாத்ரய   3. மூல் மாத்ரய
   4. யக்பத மாத்ரய   5. பட்டுதல் மாத்ரய

16. கலாஷேத்திரத்தின் நிறுவுனர் ருக்மணி தேவியின் ஆரம்ப குரு
   1. பாக்கிய லக்சுமி   2. பாலசரஸ்வதி   3. கௌரி அம்பாள்
   4. ஞானாம்பாள்   5. மணிமேகலை

17. கை, கால்களில் கந்தல் துணிகளைத் திணித்து அவற்றுள் விரல்களைப் பொருத்தி ஆடும் கிராமிய நடனம்
   1. ஏந்தல் நடனம்   2. பொம்மலாட்டம்   3. ஒயிலாட்டம்
   4. குதிரையாட்டம்   5. காவடியாட்டம்

18. நண்பர்களிடையேயான நட்பில் ஏற்படும் பாவம்
   1. வாத்சல்ய பாவம்   2. மதுர பாவம்   3. தாசிய பாவம்
   4. காந்த பாவம்   5. சாக்கிய பாவம்

19. வாரணம் ஆயிரம் சூழ வலம் ….. எனும் பாடல் அமைந்துள்ள பகுதி
   1. ஆண்டாள் திருமொழி   2. கம்பராமாயணம்   3. சீதா அபகரணம்
   4. கண்ணகி சபதம்   5. அரிச்சந்திர காண்டம்

20. மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாடலுக்கு நடன அமைப்புச் செய்தவர்
   1. மீனாட்சி சுந்தரம்பிள்ளை   2. தஞ்சை நால்வர்   3. கோபாலகிருஸ்ணபாரதியார்
   4. வழுவூர் இராமையாபிள்ளை   5. ஈ.கிருஸ்ணையர்

21. “சிவஞானசம்பந்த தலைக்கோலி” என ஆடல் மகளிருக்கு பட்டம் வழங்கிய காலம்
   1. சோழர் காலம்   2. சங்க காலம்   3. சங்கமருவிய காலம்
   4. பாண்டியர் காலம்   5. பல்லவர் காலம்

22. 1956ஆம் ஆண்டு கலாபவனம் எனும் கலைக்கோயிலை உருவாக்கிச் சாதனை படைத்தவர்
   1. ந.வீரமணி ஐயர்   2. ஏரம்பு சுப்பையா   3. என்.நல்லையா
   4. கீதாஞ்சலி   5. நடேசபிள்ளை

23. கரணங்கள் பற்றிய ஆய்வினை மேற்கொண்ட நடனக் கலைஞர்
   1. லீலாம்பிகை செல்வராசா   2. பாலசரஸ்வதி   3. பத்மா சுப்பிரமணியம்
   4. ருக்மணிதேவி   5. தனம்மாள்

24. நாட்டிய சாஸ்திரத்தில் முப்பத்திநான்காம் அத்தியாயத்தில் கூறப்பட்ட விடயங்கள்
   1. நடனத்தின் பயன்   2. நாடக அரங்கு   3. இசை, பண், ஜாதி
   4. தாளக் கருவிகள்   5. நாடக விளக்கம்

25. பஞ்சினால் மலர்கள், பறவைகள், மிருகங்கள் போன்ற உருவங்கள் செய்யும் கலைகள்
   1. வண்ணக்கலை  2. திலகமிடும் கலை  3. தோட்டக் கலை
   4. ஆடை அணியும் கலை  5. அழகுக் கலை

26. கௌதம புத்தரைப் போற்றிப் புகழ்ந்து ஆடப்படும் வண்ணம்
   1. துரக வண்ணம்  2. சிங்கராஜ வண்ணம்  3. ஈரடி வண்ணம்
   4. அஸத்ருஸ வண்ணம்  5. முசலடி வண்ணம்

27. தமிழ்ப் பதங்கள் இயற்றியோரில் முன்னோடியாகவும் காலத்தால் மூத்தவராகவும் விளங்குபவர்
   1. சீர்காழி முத்துத்தாண்டவர்  2. பாபநாசம் சிவன்  3. கவிக்குஞ்சர பாரதி
   4. வழுவூர் இராமையாபிள்ளை  5. அருணாசலக் கவிராயர்

28. ஒடிசி நடனத்தில் அரச சபையில் நடனம் ஆடியவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
   1. பீதர் காலநியர்கள்  2. பாஹர் காவண்யர்  3. தேவதாசிகள்
   4. ஆலய நர்த்தகிகள்  5. மகரிகள்

29. இசைக் கச்சேரி, பரதநாட்டியக் கச்சேரியில் இறுதியாக அமைந்த உருப்படி
   1. ஜாவளி  2. அலாரிப்பு  3. தில்லானா  4. புஸ்பாஞ்சலி  5. வர்ணம்

30. யாருடைய முயற்சியின் விளைவாக 1922ஆம் ஆண்டு பரதம் சட்டபூர்வமாகப் பாடசாலைகளில் ஒரு பாடமாகப் புகுத்தப்பட்டது?
   1. திரு.சு.நடேசபிள்ளை  2. விபுலானந்தர்  3. நடராஜசர்மா
   4. வள்ளுவர்  5. திரு.ப.வசந்தகுமார்

31. சுதந்திரமற்றவள் தாய் தந்தை அல்லது சகோதரன் பாதுகாப்பில் இருக்கும் நாயகி
   1. பிரௌடா  2. முதிரை  3. கன்னிகா  4. அனுசயானை  5. குலடை

32. பிபிலிக ஜதி என அழைக்கப்படும் ஜதி
   1. சம ஜதி  2. விசம ஜதி  3. டமருக ஜதி
   4. கோபுச்ச ஜதி  5. பிரஸ்தாபம்

33. நடராஜ திருவுருவ தத்துவத்தில் கோபத்தை அடக்குபவர் என்பதைக் காட்டுவது
   1. மான்  2. புலித்தோல்  3. பூணூல்  4. திருமுகம்  5. முயலகன்

34. வங்காரப் பூஷணம் பூட்டி திலகம் தீட்டி மாரனைக் கண்ணுளே என்பதில் மாரனைக் கண்ணு எனக் குறிப்பிடப்படுபவர்
   1. வைரவர்  2. சிவன்  3. நாரதர்  4. முருகன்  5. மன்மதன்

35. மகா வித்துவான், கலாபூசணம், இயலிசை வாரிதி எனும் பட்டங்கள் பெற்ற நாட்டிய வாக்கேயக்காரர்
   1. வழுவூர் இராமையாபிள்ளை  2. மயிலாப்பூர் கௌரியம்மா  3. ஏரம்பு சுப்பையா
   4. பிரம்மஸ்ரீ என்.வீரமணி ஐயர்  5. பாபநாசம் சிவன்

36. சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவனத்தில் பயிற்சி நிறைவில் வழங்கப்படும் பட்டம்
   1. இளங்கலைமாணி  2. கலைமாமணி  3. இளங்கலைஞர்
   4. நாட்டியமாணி  5. கலாவித்தகர்

37. கேரள கலா மண்டலத்தை உருவாக்கியவர்
   1. சித்தேந்திரயோகி  2. வள்ளத்தோல் நாராயண மேனன்  3. ஆனந்தகுமாரசுவாமி
   4. ஸ்ரீலஸ்ரீ ஆறுகுமநாவலர்  5. விவேகானந்தர்

38. புறுகு எனப்படும் மிகவும் பாரங்குறைந்த ஒருவகை மரத்தைப் பாவித்துச் செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்து ஆடப்படும் சாஸ்திரிய நடனம்
1. கதகளி 2. பரதநாட்டியம் 3. குச்சுப்புடி 4. ஒடிசி 5. மணிப்புரி

39. பதம் எனும் உருப்படி வெளிப்படுத்தும் பாவம்
1. வாத்ஸல்ய பாவம் 2. தாசிய பாவம் 3. மதுர பாவம்
4. நாயக நாயகி பாவம் 5. சாக்கிய பாவம்

40. அன்னா பவ்லோவினால் தூண்டப்பட்டு பரதநாட்டியம் கற்கப் பிரவேசித்தவர்
1. கௌரி அம்மாள் 2. பாலசரஸ்வதி 3. பத்மினி அம்மாள்
4. ஞானம்மாள் 5. ருக்மணி தேவி

41. த்விபதம் யஷ்சகானம் எனும் படைப்புக்கள் கொடிகட்டிப் பறந்த காலலம்
1. சங்க காலம் 2. நாயக்கர் காலம் 3. பல்லவர் காலம்
4. சோழர் காலம் 5. குப்தர் காலம்

42. நட பைரவி ராகம் அமையும் சக்கரத்தின் பெயர்
1. வேத 2. பாண 3. ருது 4. இந்து 5. நேத்ர

43. ஆஹார்ய அபிநயத்தில் உயிருள்ள உயிரினங்களைப் பயன்படுத்துதல்
1. அங்க ரச்சனம் 2. அலங்காரம் 3. சஞ்சீவம்
4. புஷ்டம் 5. ஸ்தம்பம்

44. தெய் தெய் திதி தெய் அடவினைச் செய்யும் பாதபேதம்
1. வேகினி 2. லுடிதம் 3. சரணம் 4. ஐந்தரம் 5. குட்டணம்

45. பீபத்ஸ ரஸத்தின் ஸ்தாயி பவாம்
1. ஆச்சர்யம் 2. உற்சாகம் 3. சிரிப்பு 4. வெறுப்பு 5. சிருங்காரம்

46. நாயகி நாயகர்களை சேர்த்து வைப்பதில் திறமையுடைய தூதர்
1. பீடமர்த்தன் 2. விடன் 3. விதூர்சகன் 4. சடன் 5. சேடன்

47. நந்திகேஸ்வரரால் நடமொழியில் எழுதப்பட்ட நாட்டிய நூல்
1. நாட்டியசாஸ்திரம் 2. பரதநாட்டியம் 3. பரதசூடாமணி
4. அபிநயதர்ப்பணம் 5. சிலப்பதிகாரம்

48. பாலசரஸ்வதியின் நாட்டியப் பணிக்கு வித்திட்டவர்
1. ஜெயம்மாள் 2. ஞானாம்பாள் 3. பாட்டியம்மா
4. தனம்மாள் 5. கௌரியம்மாள்

49. கலாஷேத்திராவில் பரதநாட்டியம் பயின்ற முதல் இலங்கைப் பெண்
1. திலவதி கனகசபை 2. சுந்தரி சாந்தலிங்கம் 3. கமலா ஜோன்பிள்ளை
4. சாந்தா பொன்னுத்துரை 5. லீலாம்பிகை செல்வராசா

50. வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் நடன மாதுவாக இருந்த கனகி பற்றிய கனகி புராணம் எனும் நூலை எழுதியவர்
1. நட்டுவனார் 2. வேந்தனார் 3. சாக்தனார் 4. சுப்பையனார் 5 கூத்தனார்

(50x2=100)

மாகாணக் கல்வித் திணைக்களம்

வடமாகாணம்

பயிற்சிப் பரீட்சை - 2017

**பரதநாட்டியம் - பகுதி 11**

தரம் - 13 (2017) நேரம் : 3 மணித்தியாலம்

**பகுதி 1 இல் முதலாம் வினா உட்பட 2 வினாக்களும்**

**பகுதி 11 இல் எவையேனும் 3 வினாக்களுக்கும்**

**மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை தருக.**

**பகுதி 1**

01. 1. நீர் கற்ற பத வர்ணத்தின் இராகம், தாளம், நாயகன், நாயகி, சாகித்திய கர்த்தா, நடன அமைப்பு முதலியவற்றைத் தருக. (6 புள்ளி)

11. இப் பதவர்ணத்தின் அனுபல்லவி சாகித்தியக் கைகளின் கருத்துக்களைத் தருக. (6 புள்ளி)

111. பத வர்ணத்தின் அனுபல்லவிக்குரிய தீரிமானம் ஒன்றினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக. (8 புள்ளி)

02. கதக் நடனத்தினைப் பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

1. தோற்றம், வளர்ச்சி ( 6 புள்ளி)

11. ஆடல் முறை ( 6 புள்ளி)

111. பயன்படுத்தப்படும் இசைக் கருவிகள் ( 3 புள்ளி)

iv. ஆடை, அணிகலன், ஒப்பனை ( 3 புள்ளி)

v. கலைஞர்கள் ( 2 புள்ளி)

03. 1. நீர் கற்ற அலாரிப்பின் இராக, தாளத்தைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

11. நீர் கற்ற அலாரிப்பின் இலட்சணத்தைத் தருக. ( 6 புள்ளி)

111. அலாரிப்பினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக. (10 புள்ளி)

## பகுதி 11

04. 1. தாளதசப் பிராணன்களில் மகா பிராணன்களைக் கூறுக. ( 5 புள்ளி)

11. தாளதசப் பிராணன்களில் உப பிராணன்களைக் குறிப்பிடுக. ( 5 புள்ளி)

111. ஜதிகளைக் குறிப்பிட்டு உதாரணத்துடன் விளக்குக. ( 10 புள்ளி)

05. சிறுகுறிப்பு எழுதுக.

1. சிந்துவண்ணம்

11. காட்சி விதானிப்பு

111. சங்கு

iv. அரங்கேற்றம் (4x5 =20புள்ளி)

06. 1. நடனக் கலை மறுமலர்ச்சிக்குத் தொண்டாற்றிய கலைஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக. ( 4 புள்ளி)

11. அவர்களால் ஆற்றப்பட்ட கலைப்பணிகளைத் தொகுத்துத் தருக. ( 7 புள்ளி)

111. ஆங்கிலேயர் காலத்தில் நடனக்கலை நலிவடைந்ததற்கான காரணங்களைத் தருக. ( 9 புள்ளி)

07. பாடசாலை உயர்தரக் கல்வியில் பரதநாட்டியம் கற்பதனால் ஏற்படும் நன்மைகளையும் தீமைகளையும் பற்றி விளக்குக. (20 புள்ளி)

The National e-learning Portal for The General Education

# மாகாணக் கல்வித் திணைக்களம்

## வடமாகாணம்

பயிற்சிப் பரீட்சை – 2017 – விடைகள்

**பரதநாட்டியம் - பகுதி 1**

தரம் - 13 (2017) நேரம் : 2 மணித்தியாலம்

01. கங்கை முத்து நட்டுவனார்
02. அஷ்டபதி
03. நிஸ்கள வாத்தியம்
04. கிராமிய நடனம்
05. உபபதி
06. ருக்மணி தேவி
07. ஆலம்பன விபாவம்
08. சித்திரமும் வடிவமைப்பும்
09. கதகளி
10. நிருத்யோபசாரம்
11. சங்கீர்ண ஜாதி
12. பல்லவர் காலம்
13. ஏறுமயில் ஏறிவிளையாடு
14. தப்பட்டை
15. யக்பத மாத்ரய
16. கௌரி அம்மா
17. பொம்மலாட்டம்
18. சாக்கிய பாவம்
19. ஆண்டாள் திருமொழி
20. வழுவூர் இராமையாபிள்ளை
21. சோழர் காலம்
22. திரு.ஏரம்பு சுப்பையா
23. பத்மா சுப்பிரமணியம்
24. தாளக் கருவிகள்
25. அழகு தரும் கலை
26. அஸத்ருஸ வண்ணம்
27. சீர்காழி முத்துத்தாண்டவர்
28. பாஹர் காவண்யர்
29. தில்லானா
30. திரு.ப.வசந்தகுமார்
31. கன்னிகா
32. சம ஜதி
33. புலித்தோல்
34. மன்மதன்
35. பிரம்மஸ்ரீ என்.வீரமணி ஐயர்
36. இளங்கலைமாணி
37. வள்ளத்தோல் நாராயண மேனன்
38. குச்சுப்புடி
39. நாயகி நாயகன் பாவம்
40. ருக்மணி தேவி
41. நாயக்கர் காலம்
42. வேத
43. சஞ்சீவம்
44. குட்டனம்
45. வெறுப்பு
46. சேடன்
47. அபிநய தர்ப்பணம்
48. ஜெயம்மாள்
49. கமலா ஜோன்பிள்ளை
50. சுப்பையனார்

(50 x 2 = 100)

e-thaksalawa The National e-learning Portal for the General Education

# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடமாகாணம்
பயிற்சிப் பரீட்சை – 2017 – விடைகள்

**பரதநாட்டியம் - பகுதி 11**

தரம் - 13 (2017) நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி 1

1. 1.

| | சகியே | நீ இந்த மாயம் |
|---|---|---|
| இராகம் | ஆனந்த பைரவி | தன்யாசி |
| தாளம் | ஆதி | ஆதி |
| நாயகன் | சடன் | அனுகூலன் |
| நாயகி | விரகோத் கண்டிதா<br>வாசகஸஜ்ஜிதா | விரகோத் கண்டிதா<br>வாசகஸஜ்ஜிதா |
| சாகித்திய கர்த்தா | சிவானந்தம் | பாபநாசம் சிவன் |
| நடன அமைப்பு | ருண்மணிதேவி அருண்டேல் | அடையாறு கே.லக்ஸ்மணன் |

(6 புள்ளி)

11. அனுபல்லவி சாகித்திய கைகளின் கருத்துக்களை எழுதியிருப்பின் ( 6 புள்ளி)

111.அனுபல்லவிக்குரிய தீர்மானம் ஒன்றினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதியிருப்பின் ( 8 புள்ளி)

2. கதக் நடனத்தின்
   1. தோற்றம் வளர்ச்சி குறிப்பிட்டிருப்பின் ( 6 புள்ளி)
   11. ஆடல்முறை குறிப்பிட்டிருப்பின் ( 6 புள்ளி)
   111. பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் குறிப்பிட்டிருப்பின் ( 6 புள்ளி)
   iv. ஆடை, அணிகலன், ஒப்பனை குறிப்பிட்டிருப்பின் ( 3 புள்ளி)
   v. கலைஞர்களைக் குறிப்பிட்டிருப்பின் ( 2 புள்ளி)

3. 1. இராகம் - நாட்டை
   தாளம் - மிஸ்ர சாபு ( 4 புள்ளி)
   11. அலாரிப்பின் இலட்சணம் எழுதியிருப்பின் ( 6 புள்ளி)
   111. அலாரிப்பினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதியிருப்பின் ( 10 புள்ளி)

**பகுதி 11**

4. 1. காலம், மார்க்கம், கிரியை, அங்கம், கிரகம் ( 5 புள்ளி)
   11. ஜாதி, களை, லயம், ஜதி, பிரஸ்தாரம் ( 5 புள்ளி)
   111. சம ஜதி, விஷம ஜதி, ஸ்ரோதோவக ஜதி, கோபுச்ச ஜதி, மிருதங்க ஜதி, டமருக ஜதி என்பவற்றை உதாரணத்துடன் எழுதியிருப்பின் (10 புள்ளி)

5. சிறுகுறிப்பு எழுதியிருப்பின் (4x5 – 20புள்ளிகள்)

6. 1. ஈ.கிருஸ்ணையர், ருக்மணிதேவி அருண்டேல், பாலசரஸ்வதி ( 4 புள்ளிகள்)
   11. அவர்களால் ஆற்றப்பட்ட கலைப்பணி குறிப்பிட்டிருப்பின் ( 7 புள்ளிகள்)
   111. நலிவடைந்த காரணங்கள் ஏழும் குறிப்பிட்டிருப்பின் ( 9 புள்ளிகள்)

7. உயர்தரக் கல்வியில் பரதநாட்டியம் கற்பதனால் ஏற்படும் நன்மைகளையும் தீமைகளையும் குறிப்பிட்டிருப்பின் (20 புள்ளிகள்)

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடமாகாணம்
தரம் 13
பரதநாட்டியம்
செய்முறைப் பயிற்சிப் பரீட்சை – 2017

## வினாத்தாள் - 01

01. விரும்பிய அடவை மிஸ்ர நடையில் அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

02. உத்பிளவன பேதத்தினை அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

03. நீர் கற்ற அலாரிப்பினை தாளத்தில் கொலுப்பித்து முழுமையாக அபிநயித்துக் காட்டுக (10 புள்ளி)

04. கௌத்துவத்தினை தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (10 புள்ளி)

05. i. நீர் கற்ற வர்ணத்தின் திரிகால தீர்மானத்தையும் அதன் சாகித்தியத்தையும் அபிநயித்துத் தாளத்தில் கொலுப்பித்தும் அபிநயித்தும் காட்டுக.
   ii. முக்தாயிஸ்வரக் கோர்வையை தாளத்தில் கொலுப்பித்து அபிநயிப்பதுடன் சாகித்தியத்தையும் அபிநயித்துக் காட்டுக.
   iii. முதலாவது சரணஸ்வரக் கோர்வையினையும் சாகித்தியத்தையும் தாளத்தில் கொலுப்பித்து செய்து காட்டுக. (25 புள்ளி)

06. நீர் கற்ற பதத்தின் அனுபல்லவியைத் தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (5புள்ளி)

07. நீர் கற்ற கீர்த்தனையின் பல்லவியினைத் தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுவதுடன் அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

08. ஜாவளியின் சரணத்தினை தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

09. நீர் கற்ற அஷ்டபதியின் பல்லவிப் பகுதியினைத் தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

10. தில்லானாவின் சரணப்பகுதியினை தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (10 புள்ளி)

11. “ஆடுகிறான் கண்ணன் பாடுகிறான் கண்ணன் ஆனந்த ராதையுடன்” இப் பாடல் வரிகளுக்கு ஒரு நேர்க் கையுடன் சஞ்சாரி பாவத்தினையும் அபிநயித்துக் காட்டுக. (15 புள்ளி)

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடமாகாணம்
தரம் 13
பரதநாட்டியம்
செய்முறைப் பயிற்சிப் பரீட்சை – 2017

## வினாத்தாள் - 02

01. 3 ஆவது தத்தெய்தாஹா அடைவ விரும்பிய ஜாதியில் நடைமாற்றிச் செய்க. (5 புள்ளி)
02. ஸ்தானக பேதத்தினை அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)
03. நீர் கற்ற அலாரிப்பினை தாளத்தில் கொலுப்பித்து முழுமையாக அபிநயித்துக் காட்டுக (10 புள்ளி)
04. கௌத்துவத்தினை தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (10 புள்ளி)

05. i. நீர் கற்ற வர்ணத்தின் பல்லவி முடிவடைய வரும் தீர்மானத்தையும் அனுபல்லவியின் சாகித்தியத்தையும் தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக.
    ii. முக்தாயிஸ்வரத்தின் கோர்வையைத் தாளத்தில் கொலுப்பித்து சாகித்தியத்தையும் அபிநயித்துக் காட்டுக.
    iii. மூன்றாவது சரணஸ்வரக் கோர்வையினையும் சாகித்தியத்தையும் தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்து செய்து காட்டுக. (25 புள்ளி)

06. நீர் கற்ற பதத்தின் அனுபல்லவியைத் தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (5புள்ளி)
07. நீர் கற்ற கீர்த்தனையின் சரணத்தினைத் தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

08. ஜாவளியின் பல்லவியினை தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

09. நீர் கற்ற அஷ்டபதியின் பல்லவிப் பகுதியினைத் தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

10. தில்லானாவில் நீர் விரும்பிய மெய்யடவினையினையும் 4ஆவது கோர்வையையும் அபிநயித்துக் காட்டுவதுடன் 4ஆவது கோர்வையைத் தாளத்தில் கொலுப்பிக்குக. (10 புள்ளி)
11. “கந்தனிடம் என்ன காந்தம் இருக்குதடி நாளை வரும் என்று நம்பலாமா” இப் பாடல் வரிகளுக்கு ஒரு நேர்க் கையுடன் சஞ்சாரி பாவத்தினையும் அபிநயித்துக் காட்டுக. (15 புள்ளி)

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடமாகாணம்
தரம் 13
பரதநாட்டியம்
செய்முறைப் பயிற்சிப் பரீட்சை – 2017

## வினாத்தாள் - 03

01. 1ஆவது தத்தெய்தாம் அடவைக் கண்ட ஜாதியில் செய்து காட்டுக. (5 புள்ளி)

02. மண்டல பேதத்தினை அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

03. நீர் கற்ற அலாரிப்பினை தாளத்தில் கொலுப்பித்து முழுமையாக அபிநயித்துக் காட்டுக (10 புள்ளி)

04. கௌத்துவத்தினை தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (10 புள்ளி)

05. i. நீர் கற்ற வர்ணத்தின் திரிகால தீர்மானத்தையும் பல்லவியின் சாகித்தியத்தையும் அபிநயித்துத் தாளத்தில் கொலுப்பித்தும் அபிநயித்துக் காட்டுக.
    ii. முக்தாயிஸ்வரக் கோர்வையை தாளத்தில் கொலுப்பித்து அபிநயிப்பதுடன் சாகித்தியத்தையும் அபிநயித்துக் காட்டுக.
    iii. இரண்டாவது சரணஸ்வரக் கோர்வையினையும் சாகித்தியத்தையும் தாளத்தில் கொலுப்பித்து செய்து காட்டுக. (25 புள்ளி)

06. நீர் கற்ற பதத்தின் சரணத்தை தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (5புள்ளி)

07. நீர் கற்ற கீர்த்தனையின் அனுபல்லவியினைத் தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுவதுடன் அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

08. நீர் கற்ற ஜாவளியின் பல்லவியை தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

09. நீர் கற்ற அஷ்டபதியின் சரணத்தை தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

10. தில்லானாவில் விரும்பிய மெய்யடவுடன் 6ஆவது கோர்வையைத் தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (10 புள்ளி)

11. “ நீ வரும் வேளை – உனை
எதிர்பார்த்திருந்தேன் முருகா ” இப் பாடல் வரிகளுக்கு ஒரு நேர்க் கையுடன் சஞ்சாரி பாவத்தினையும் அபிநயித்துக் காட்டுக. (15 புள்ளி)

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடமாகாணம்
தரம் 13
பரதநாட்டியம்
செய்முறைப் பயிற்சிப் பரீட்சை – 2017

## வினாத்தாள் - 04

01. விரும்பிய அடவை சங்கீர்ண நடையில் அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

02. ப்ரமரி பேதத்தினை அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

03. நீர் கற்ற அலாரிப்பினை தாளத்தில் கொலுப்பித்து முழுமையாக அபிநயித்துக் காட்டுக (10 புள்ளி)

04. கௌத்துவத்தினை தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (10 புள்ளி)

05. i. நீர் கற்ற வர்ணத்தின் அனுபல்லவியையும் அனுபல்லவி முடிய வரும் தீர்மானத்தையும் அதன் சாகித்தியத்தையும் அபிநயித்துத் தாளத்தில் கொலுப்பித்தும் அபிநயித்தும் காட்டுக.

ii. முத்தாஸ்வரக் கோர்வையை தாளத்தில் கொலுப்பித்து அபிநயிப்பதுடன் சாகித்தியத்தையும் அபிநயித்துக் காட்டுக.

iii. நான்காவது சரணக் கோர்வையினையும் சாகித்தியத்தையும் தாளத்தில் கொலுப்பித்து செய்து காட்டுக. (25 புள்ளி)

06. நீர் கற்ற பதத்தின் அனுபல்லவியைத் தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (5புள்ளி)

07. நீர் கற்ற கீர்த்தனையின் சரணத்தினைத் தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுவதுடன் அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

08. ஜாவளியின் சரணத்தினை தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

09. நீர் கற்ற அஷ்டபதியின் பல்லவிப் பகுதியினைத் தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

10. தில்லானாவில் விரும்பிய மெய்யடவுடன் ஐந்தாவது கோர்வையை தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (10 புள்ளி)

11. " மாயன் குழல் இசையில் மயங்கிவிட்டேனடி
போய் அவரைக் கூட்டி வாடி புண்ணியம் உண்டடி." இப் பாடல் வரிகளுக்கு ஒரு நேர்க் கையுடன் சஞ்சாரி பாவத்தினையும் அபிநயித்துக் காட்டுக. (15 புள்ளி)

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடமாகாணம்
தரம் 13
பரதநாட்டியம்
செய்முறைப் பயிற்சிப் பரீட்சை – 2017

## வினாத்தாள் - 05

01. முதலாவது மண்டியடவைத் திஸ்ர நடையில் அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

02. பாதசாரிகா பாதபேதத்தினை அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

03. நீர் கற்ற அலாரிப்பினை தாளத்தில் கொலுப்பித்து முழுமையாக அபிநயித்துக் காட்டுக (10 புள்ளி)

04. கௌத்துவத்தினை தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (10 புள்ளி)

05. i. நீர் கற்ற வர்ணத்தின் அனுபல்லவித் தீர்மானத்தையும் அதன் சாகித்தியத்தையும் அபிநயித்துத் தாளத்தில் கொலுப்பித்தும் காட்டுக.
ii. முக்தாயிஸ்வரக் கோர்வையை தாளத்தில் கொலுப்பித்து அபிநயிப்பதுடன் சாகித்தியத்தையும் அபிநயித்துக் காட்டுக.
iii. முதலாவது சரணஸ்வரக் கோர்வையினையும் சாகித்தியத்தையும் தாளத்தில் கொலுப்பித்து செய்து காட்டுக. (25 புள்ளி)

06. நீர் கற்ற பதத்தின் சரணத்தைத் தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (5புள்ளி)

07. நீர் கற்ற கீர்த்தனையின் அனுபல்லவியினைத் தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுவதுடன் அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

08. ஜாவளியின் சரணத்தினை தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

09. நீர் கற்ற அஷ்டபதியின் பல்லவிப் பகுதியினைத் தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (5 புள்ளி)

10. தில்லானாவின் முதலாவது கோர்வையையும் அனுபல்லவியையும் தாளத்தில் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுக. (10 புள்ளி)

11. " என்னமோ கனமாக இருக்குதடி
வண்ணமயில் அழகன் வருவானோ நீ - சொல்லடி " இப் பாடல் வரிகளுக்கு ஒரு நேர்க் கையுடன் சஞ்சாரி பாவத்தினையும் அபிநயித்துக் காட்டுக. (15 புள்ளி)